பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர், எங்கள் குடும்பத்திற்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்ற முறையில் தாயாரோடு அவர் வேலை நேரங்கள் இல்லாத போதும் கூட உதவிக்குச் செல்வது வழக்கம்.

இந்த முறையில்தான் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று எனது தாயாரும், பாதுகாப்பு அதிகாரியும் சென்றிருக்கிறார்கள். இதுதான் அந்தச் சம்பவம் நடைபெற்றதற்குப் பின்னணி என்றாலும், நான் பயன்படுத்துகிற இந்தக் காரை என் தாயார் உபயோகப்படுத்த உரிமை இருக்கிறதென்றாலும், நான் விரும்பாத ஒரு இடத்திற்கு அந்தக் காரை எடுத்துச் சென்றது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுபற்றிய செய்தி எனக்குத் தெரிந்தவுடன் என்னுடைய தாயாரையும், பாதுகாப்பு அதிகாரியையும் இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக் கூடாதென்று உண்மையாகக் கண்டித்திருக்கிறேன்.

எனவே, என்னுடைய கவனத்திற்கு அப்பாற்பட்டு நடந்து விட்ட இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எனக்குத் தெரியாமல் கூட நடைபெறாது என்பதற்கு உறுதி கூறுகிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள,
(ஒப்பம்) பி. டி. சரஸ்வதி.

(4) உரிமைப் பிரச்னைகள்.

(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலை முரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 27—2—1978 அன்று பேரவையில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீதும், திரு. து. புருஷோத்தமன் அவர்கள் மாலை முரசு நாளிதழ் மீதும், திரு. ஏ. ரகுமான்கான் தினமணி நாளிதழ் மீதும்,

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 6

திரு. செஞ்சி இராமச்சந்திரன் அண்ணா நாளிதழ் மீதும் உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நிதி அமைச்சர் 23—2—1978-ல் பேரவையில் ஆற்றிய உரையின் பகுதியை 25—2—1978 அன்று பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் படித்ததை முழுவதுமாக இப்பத்திரிகைகள் செய்தியை வெளியிடாதது உள்நோக்கத்துடன் மக்களுக்குத் தவறான தகவலைத் தந்து மக்களைத் திசை திருப்புவதாக அமைந்துள்ளது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பத்திரிகைகளுக்கு விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாக நான் தெரிவித்திருந்தேன்.

இதேமாதிரி தினத்தந்தி நாளிதழ் மீது இதே காரணத்திற்காக திரு. உச்சி கவுடர் அவர்களும் ஒரு அறிவிப்பைப் பின்னர் கொடுத்திருந்தார். அதையும் இவற்றுடன் இணைத்து மேலே குறிப்பிட்டுள்ள எல்லா பத்திரிகைகளுக்கும் விளக்கம் கேட்டு எழுதப்பட்டது.

(முற்பகல் 10-10)

அவைகளிடமிருந்து விளக்கங்கள் வந்துள்ளன. இவற்றில், தினத்தந்தி, மாலைமுரசு இரண்டு பத்திரிகைகளும் இனிமேல் கவனமாக இருப்பதாகத் தெரிவித்தும், விடப்பெற்ற பகுதிகளுடன் சேர்த்து முழுப் பகுதியையும் மீண்டும் 1—3—1978 அன்று வெளியிட்டுள்ளதாகவும் பதில் அனுப்பியுள்ளன. எனவே, அப்பத்திரிகைகளை இனி இம்மாதிரி நிகழாவண்ணம் கவனத்துடன் நடந்து கொள்ளும்படி தெரிவித்துக்கொள்கிறேன்.

இடநெருக்கடி காரணமாக, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசியது முழுவதையும் அது சம்பந்தப்பட்ட மற்ற பகுதிகளையும் கூடத் தாங்கள் வெளியிடவில்லை என்றும், எனவே ஒரு பகுதியை மறைத்து வெளியிட்டு, அதன் மூலம் மக்களுக்குத் தவறான தகவலைத் தரவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றும் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும் அண்ணா, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகிய நாளிதழ்கள் தெரிவித்துள்ளன.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலைமுரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.

1978 மார்ச் 6] *[பேரவைத் தலைவர்]*

பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதும் வெளியிட முடியாது என்பதையும் ஆனால் மையக் கருத்துக்கள் மாறாமல் கூடியவரை எல்லா நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவது தான் நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளேன். அதை மீண்டும் வலியுறுத்தி, அவைநிகழ்ச்சிகளை வெளியிடும்போது இம்மாதிரி தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்வது அவசியம் என்றும், இடநெருக்கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விட்டு அதையொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சில சமயங்களில் தவறான கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இனிமேல் இம்மாதிரி நிகழா வண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, அவை உரிமை குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை மீதான பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1—3—1978 அன்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் பேரவையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையை கொண்டு வந்தார். அப்பத்திரிகை 15—2—1978 அன்று வெளியிட்ட ஒரு செய்தி குறித்துப் பேரவையில் 23—2—1978 அன்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். அதற்கு நான் 28—2—1978 அன்று எனது தீர்ப்பை அளித்தேன். 1—3—1978 அன்று இது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் எனது தீர்ப்பு முழுவதும் வெளியிடப்பெறவில்லை என்றும் அப்பத்திரிகை எழுதிய கடிதத்தின் வருத்தம் தெரிவிக்கும் பகுதியும், இனி இவ்விதம் நிகழாது என்று உறுதி அளித்தப் பகுதியும் எனது தீர்ப்பில் நான் கொடுத்த எச்சரிக்கைப் பகுதியும் விடுபட்டுள்ளன என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்டது என்றும், எனவே இது அவை உரிமையை மீறிய செயல் என்றும் திரு. உமாநாத் குறிப்பிட்டார்.